[1987 மார்ச் 26

போளூர் நகர், அல்லி நகரில் மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைத்தல்.

184—(*வினா எண் 9580) **திரு. ஜெ. ராஜாபாபு**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் நகரிலுள்ள அல்லி நகரில் குடிநீர் வசதிக்காக மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 பேர்கள் இருக்கின்ற பகுதிக்கும், ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பகுதிக்கும்தான் ஆழ்துளைக் கிணறுகளைப் பொருத்த முடியும் என்று அரசுத் தரப்பிலே ஜி.ஓ.க்கள் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. இன்றையதினம் அருந்ததிய மக்கள், அரிசன மக்கள் வாழ்கிற பகுதிகளில் இதனால் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. கடுமையான வறட்சிக் காலங்களில் இதுபோன்ற அரசு ஜி.ஓக்கள் எல்லாம் இருக்கிறது என்று சொன்னால், அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் கிடைக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. மேலும் மலைப் பகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் இதுபோன்ற சூழ்நிலைகளினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே குடிநீர் கிடைக்க முடியாத பகுதிகளுக்கு இந்த விதியைத் தளர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் மழை இல்லை. அதனால் எங்கே குடிநீர் நிலத்தடியில் கிடைக்கிறது என்பதை மீட்டர் வைத்து பார்த்துதான் தண்ணீர் எடுத்து கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆதி திராவிடர்கள் வாழ்கிற பகுதியில் கிணறு எடுத்தாலும் அதிலிருந்து மேல்ஜாதிக்காரர்களுக்கு கொடுக்க வேண்டியதுதான். மேல்ஜாதிக்காரர்கள் வாழ்கிற பகுதியில் கிணறு எடுத்தாலும் அதிலிருந்து ஆதி திராவிடர்களுக்கு

1987 மார்ச் 26]

கொடுக்க வேண்டியதுதான். அப்படித்தான் இன்றைய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தண்ணீர் எங்கே கிடைக்கிறதோ அங்கே தண்ணீர் எடுக்கிற ஏற்பாட்டை செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே தண்ணீர் கிடைக்கிற இடத்தில்தான் குடிநீர் வடிகால் வாரியம் தற்போது இந்த வறட்சி நிலையில் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

வேடசந்தூர் வட்டம், எரியோடு நகரில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

185—(*வினா எண் 10335) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம், எரியோடு நகரில் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நிரந்தரமாக தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரியோடு பேரூராட்சி ஊரகப் பேரூராட்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற ஊரகப் பேரூராட்சிகளில் ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ், முழு மானிய அடிப்படையில் குடிநீர் வழங்கும் திட்டத்தினைச் செயற்படுத்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கிராமப் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்ட ஆய்வு வேலைகள் 1987-88 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சிப் பகுதி முழுவதும் குடிநீர் பிரச்சினைகள் என்பது நிரந்தரமாக இருக்கிற ஒன்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறபோது இந்த நகரத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல் இதைச் சுற்றி இருக்கிற கிராமங்களுக்கும் ஏற்படுத்தப்பட இருக்கிற இந்த குடிநீர் திட்டத்தில் குடிநீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி அறிய ஆய்வின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.